History of India from 1206 AD
1707 C.E

Code no 18K2H03

## டெல்லி சுல்தானியம் கி.பி 1206 கி.பி 1290

### அடிமை வம்சம்

கி.பி 1206லிருந்து கி.பி 1290 வரை டெல்லியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த அடிமை அரசர்கள் அடிமை வம்சத்தை சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

### குத்புதீன் ஐபெக் கி.பி 1206- கி.பி 1210

முதல் மன்னர். துருக்கிய ஆட்சியைத் தோற்றுவித்தார்.

சமரசக் கொள்கை

துருக்கிய போட்டியாளர்களைத் தன் பக்கம் வைத்துக் கொள்வதற்காக சமரசக் கொள்கையை கடைப்பிடித்தார்

### பெருக்கத்தில் பணிவு

இவர் ஆடம்பரத்தை துறந்து எளிமையோடும் பணிவோடும் இருந்தார். ராஜபுத்திரர்களுடன் நட்புறவாக் கொண்டார். இவர் லட்சங்களை அள்ளிக் கொடுப்பவர் என்று அழைக்கப்பட்டார். இவர் நியாயமான நிர்வாகி. இவர் சமயத்தை மக்களிடம் திணிக்கவில்லை

குதுப்மினார் கோபுரத்தைக் கட்டத் துவங்கினார் என்றும் அவர் இக்கோபுரத்தைக் கட்டி முடிப்பதற்குள் போலோ விளையாடுகையில் குதிரையிலிருந்து

இருந்து உயர்ந்தார். இவர் மருமகனான இல்துமிஷ் இதை கட்டி முடித்தார்.

## இல்துமிஷ் கி.பி 1211 - 1236

குத்புதீன் ஐபக்கிடம் இவர் அடிமையாக இருந்ததால் இவர் அடிமையின் அடிமை என்று அழைக்கப்பட்டார். குத்புதீன் ஐபக்கின் மகளை திருமணம் செய்துக் கொண்டார்

### நாற்பதின்மர் குழு

இவர் நாற்பதின்மர் குழுவை நிறுவினார். அரேபிய நாணய முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

### தலைநகர் மாற்றம்

தலைநகரை லாகூரிலிருந்து டெல்லிக்கு மாற்றினார். இத்தால் நிர்வாக முறை மேம்படுத்தப்பட்டது.

இவரது தலைமையின் கீழ் டெல்லி சுல்தானியம் உண்மையான, சுதந்திரமான, இறையாண்மையோடு கூடிய பேரரசாயிற்று.

விரோதிகளை அடக்கினார். சிந்துவையும், முல்தானையும் இணைத்து பேரரசை கட்டி காப்பாற்றினார் டெல்லியை மங்கோலியரின் பிடியிலிருந்து காப்பாற்றினார்.

## ரசியா சுல்தானா 1236 - கி.பி 1240

### பெண் வாரிசு

இல்துமிஷின் மகளாவார். தந்தையை தன்னிடம் அளித்த பொறுப்பை சிறப்பாகச் செய்தாள் இல்துமிஷ் தன் மகளை பட்டத்து இளவரசியாக அறிவிப்பதற்கு ஆணையை தயாரிக்க உத்தரவிட்டார்

## பெண்ணரசி

இந்திய வரலாற்றில் டெல்லியிலிருந்து ஆட்சி செய்த ஒரே பெண்ணரசி ரசியா சுல்தானாதான். நான்காண்டு காலம் ஆட்சி செய்தார். பிரித்தாளும் கொள்கையால் மேலாண்மை செய்தார். வயதுக்கு மீறிய அறிவுக்கூர்மை அவருக்கு இருந்தது.

## நிர்வாக சீரமைப்பு

டெல்லி சுல்தானியத்தில் சட்டம், ஒழுங்கு, அமைதி நிலைநாட்டப்பட்டது.

## ஆணுடையில் அரசி

முஸ்லீம் பெண்கள் அணிந்து கொள்ளும் முகபர்தா அங்கிக்கு பதில் ஆணுடை அணிந்தார். ஆண்கள் அணியும் தலைப்பாகையை சூட்டிக் கொண்டார். குதிரைக்கு பதில் யானை மீது அமர்ந்து சவாரி செய்தார். ஆணுடையிலேயே அரச தர்பாரில் பங்கேற்றார். இவருடைய இந்த செயல் பழமைவாதி -களுக்கு பிடிக்க வில்லை.

## மாலிக் யாகூத்

இவர் அபிசீனிய அடிமை. இவருக்கு அரசி இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பதவியை அளித்தார். அரசி இராணுவ சம்பந்தமான ஆலோசனையை இவரிடம் கேட்டாள். துருக்கிய பிரபுகளுக்கும், அமீர்களுக்கும் இது பிடிக்கவில்லை. அவர்கள் சதி செய்து இவரின் ஆட்சியை கவிழ்த்தனர். ரசியா கொள்ளைக்காரர்களால் கொல்லப்பட்டார். அனைத்திக்கத் -துக்கிடையே டெல்லி சுல்தானியத்தை துணிவுடன் ஆட்சி செய்த முதல் முஸ்லீம் அரசி கொல்லப்பட்டார்.

# கியாசுதீன் பால்பன் கி.பி 1266 - 1286

அடிமையாக இருந்த பால்பன் தன் வாழ்நாள் படிப்படியாக உயர்ந்தார். நாற்பதின்மர் குழுவின் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ரசியாவின் ஆட்சிக் காலத்தில் தலைமை வேட்டைக்காரராகப் பதவி உயர்வு பெற்றார்.

## இரும்பு மனிதர்

சுல்தானியத்துக்கு எதிரானவர்கள் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்பட்டனர். இவர் டெல்லி சுல்தானியத்தின் இரும்பு மனிதர் ஆனார்.

## பால்பனின் கொள்கை

1) இறைத்தன்மை, அதிகாரம் கௌரவம் ஆகியவற்றை நிலைநாட்டல் 2) நாற்பதின்மரை வேருடன் களைவது 3) சுல்தானியத்தை மங்கோலியப் படையெடுப்பிலிருந்து பாதுகாத்தல் 4) திருடர், கொள்ளையர், கொலைகாரர் ஆகியோரின் அட்டகாசத்திலிருந்து மக்களை விடுவித்தல் 5) மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றுதல்.

பொது வாழ்க்கையில் ஆடம்பரத்தை கடைப்பிடித்தாலும் தனிப்பட்ட வாழ்க்கையில் மிக எளிமையாக இருந்தார். மது அருந்தவோ, சூதாட்டமோ இல்லை. குரானை படிவங்கள் எடுத்து அதன் வருவாயை கொண்டு எளிய வாழ்வை வாழ்ந்தார்.

## நாற்பதின்மர் நசுக்கப்படல்

துருக்கிய செல்வந்தரும், அதிகாரிகளும், அமீர்களும் அமைத்துக்கொண்ட அமைப்பே நாற்பதின்மர் குழு. இதை இல்துமிஷ் அமைத்தார். பால்பன் நாற்பதின்மர் குழுவை அழித்தார்.

நீதியை நிலை நாட்டினார். மேவாக்களை முறியடித்தார். கிளர்ச்சிக்காரர்களை அடக்கினார். மங்கோலியர் பேராபத்திலிருந்து டெல்லியை காத்தார்.

## கில்ஜி வம்சம்

ஜலாலுதீன் கில்ஜி இவ்வம்சத்தை ஏற்படுத்தினார். சிதறுண்டு போகும் நிலையிலிருந்த சுல்தானியத்தைக் காப்பாற்றியவர்.

## அலாவுதீன் கில்ஜி கி.பி 1296 – கி.பி 1316

அலிகர்ஷாப் என்ற அலாவுதீன் சுல்தான் ஜலாலுதீனின் மூத்த சகோதரரின் மகன். அலாவுதீன் ஜலாலுதீனால் வளர்க்கப்பட்டார். தன் மகளையே மணமுடித்து வைத்தார். ஜலாலுதீன் கில்ஜியைக் கொன்றுவிட்டு ஆட்சியை அபகரித்துக் கொண்டார். எனவே அலாவுதீனின் ஆட்சி அபகரிக்கப்பட்ட ஆட்சியாகும்.

முப்பெரும் பிரச்சனைகள்

1) அதிகார பலமற்ற மத்திய அரசாங்கம்
2) பலமுள்ள துருக்கிய பிரபுக்கள்
3) பாதுகாப்பற்ற வடமேற்குப் பகுதி

இப்பிரச்சனையை தீர்ப்பதற்கு அவருக்கு தேவைப்பட்டவை இரண்டு

1) வலிமைமிக்க இராணுவம்
2) கருவூலம் நிறைய பணம்.

படைப் பெருக்கம்

நிரந்தர நிலைப்படை உருவாக்கப்பட்டது. அலாவுதீனின் நிலைப்படை பலமிக்கப் போர் இயந்திரமாக உருமாற்றமடைந்தது.

## வருவாய்ப் பெருக்கம்

அரசாங்க உயர் செலவுக் கணக்கில் சிறப்புக் கவனம் செலுத்தினார். நில வரி அதிகரிக்கப்பட்டது. படையெடுப்புகளின் போது கொள்ளையடிக்கப்பட்ட செல்வங்களையும், பொருட்களையும் அரசாங்கத்தின் வருவாயாகக் கொண்டார். கருவூலம் நிறைந்தது.

## விலைவாசிக் கட்டுப்பாடு

இவரின் சந்தை சீர்திருத்தம் மிகவும் புகழ் வாய்ந்தது. விலைக் கட்டுப்பாட்டுக்காகக் கடுமையான நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவரின் பொருளாதார நடவடிக்கைகளை சமகாலத்தவர் வியந்து போற்றினர்.

## வட இந்திய வெற்றிகள்.

குஜராத், ரந்தாம்பூர், மேவார், சித்தூர், மாளவம், மார்வார், சிவானா, ஜலோர் ஆகிய நாடுகளை ராஜபுத்திரர்களிடமிருந்து கைப்பற்றினார். முல்தான், சிந்து பகுதிகளையும் கைப்பற்றினார்.

## தென்னிந்தியப் படையெடுப்புகள்

### மாலிக் காபூர்

இவரின் தென்னிந்திய படையெடுப்புக்கு தலைமை தாங்கியவர் மாலிக் காபூர். இவர் தேவகிரி, வாரங்கல், துவார சமுத்திரம், மதுரை போன்ற பகுதிகளின் மீது படையெடுத்து அலாவுதீன் கில்ஜிக்கு வெற்றியை தேடித் தந்தார்.

## அலாவுதீன் கில்ஜியின் அற்புத சாதனைகள்.

1) மக்களை தேவைப்படும் அத்யாவசியப் பொருட்களை மலிவு விலையில் விநியோகித்தது.
2) இவர் பெற்ற தொடர் வெற்றிகள்
3) மங்கோலியரின் படையெடுப்பு முயற்சிகளை முறித்தது.
4) குறைந்த செலவில் திறமையான பெரிய ராணுவத்தை நிர்வகித்தது.

## துக்ளக் வம்சம்

காசி மாலிக் என்ற கியாசுதீன் துக்ளக், துக்ளக் வம்சத்தை தோற்றுவித்தார். இவர் கியாசுதீன் துக்ளக் என்ற பெயரில் முடிசூட்டிக் கொண்டார்.

## முகமது பின் துக்ளக் கி.பி 1325 - 1351

### பல்கலை வித்தகர்

இவர் பன்மொழிப் புலவர். கேட்டார் பிணிக்கும் பேச்சாளர். கவின் கலைக் கலைஞர். கணிதம், மருத்துவம், தர்க்கவியல், வானவியல், தத்துவம் ஆகிய துறைகளில் புலமை பெற்றவர்.

### ஐம்பெரும் பரிசோதனைகள்

1) தலைநகர் மாற்றம் கி.பி 1327

தன் தலைநகரை டெல்லியிலிருந்து தேவகிரிக்கு மாற்றினார். இதனால் மக்கள் பெரும் துயரம் அடைந்தனர். 700 மைல் தூரம் கடக்க வேண்டியிருந்தது. தலைநகர் மாற்றுத்திட்டம் தோல்வியடைந்ததைக் கண்ட சுல்தான் இருப்பவர்கள் மீண்டும் டெல்லிக்கே திரும்பலாம் என்று உத்தரவிட்டார். மக்களுக்கு இரண்டு தண்டனைகள்

2) அடையாள நாணயம் அறிமுகம் கி.பி 1329 - 1332

செப்புக் காசுகளை வெளியிட்டார். இவை வெள்ளிக் காசுகளுக்குச் சமமானவை என்று கூறினார். கள்ளக் காசுகள் தயாரிக்கப்பட்டு சந்தையில் புழக்கத்திற்கு வந்தது. அதிர்ச்சியடைந்த இவர் செப்புக் காசுக்கு பதிலாக மக்களுக்கு தங்கம் அல்லது வெள்ளிக் காசுகளை வழங்கினார்.

3) குராசன் படையெடுப்பு கி.பி 1332 - 1333

பாரசீகத்தின் பகுதியான குராசன் பகுதியை கைப்பற்ற நினைத்தார். இத்திட்டமும் தோல்வியில் முடிந்தது. அரசாங்க பணம் வீண் விரயமாயிற்று.

குராசல் படையெடுப்பு கி.பி 1333-1334

சிந்துவுக்கும் சீனாவுக்கும் இடைப்பட்ட குராசல் மலைப் பகுதியை கைப்பற்றுவதாகும். படைவீரர்கள் கொள்ளை நோயால் மடிக்கப்பட்டனர். இப்படையெடுப்பும் தோல்வியில் முடிந்தது.

நிலவரி சீர்திருத்தங்கள்

விவசாய கடன்கள் தாராளமாக வழங்கப்பட்ட. விவசாயத் துறை ஏற்படுத்தப்பட்டது. நிதி நெருக்கடியால் கடுமையாக வரி வசூலிக்கப்பட்டது. கொடுமை தாங்க முடியாத பலர் வேறு இடங்களுக்குச் சென்றனர். இவருடைய நிலவரி சீர்திருத்தங்களும் தோல்வியில் முடிந்தது.

இவர் மேற்கொண்ட நல்ல முற்போக்குத் திட்டங்கள் தோல்வியில் முடிந்தன.

பெரோஸ் ஷா துக்ளக் கி.பி 1351-1386

உழைப்பால் உயர்ந்த இவர் 14 வயதில் முதல் பதவியைப் பெற்று 46வது வயதில் டெல்லி சுல்தானாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மாற்றுக் கருத்தை மதித்தார்

மாலிக் மக்புல், என்ற கான்-இ-ஜஹான் என்பவரைத் தனது பிரதான அமைச்சராக்கிக் கொண்டார். இவர் பெரோஸின் மறுஉருவம் என்றால் மிகையாகாது.

துயர் துடைப்பு பணிகள்

மக்கள் அரசாங்கத்திடம் இருந்து பெற்ற பணங்கள் (கடன்கள்) அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டன.

விவசாயப் பொருளாதாரம்

விவசாயத்திற்கு அதிக கால்வாய்களை வெட்டிய மன்னர் இவரே. ஏராளமான கிணறுகள் தோண்டப்பட்டன. பழத்தோட்டங்கள் உருவாக்கப்பட்டன.

## பொருளாதாரக் கொள்கை

பொருளாதாரக் கொள்கையின் நோக்கங்கள் இரண்டு 1) அரசாங்க வருவாயை உறுதி செய்வது. 2) மக்களின் வரி பளுவைக் குறைப்பது. அரசாங்கத்தின் வரவு செலவு கணக்கு முறைப்படுத்தப்பட்டது. வரிகள் மனிதாபிமானத்துடன் வசூலிக்கப்பட்டன.

## தீர்க்கமான திட்டங்கள்

பெரோஸ் துக்ளக் ஏழை பங்காளர். இயல்பாகவே ஏழைகளுக்கு உதவும் மனமுடையவர்.

1) ஏழைகளின் தேவையை பூர்த்தி செய்வதற்காகத் தனித்துறை (Diwan-i-Khairat) தோற்றுவிக்கப்பட்டது.
2) முதியோருக்கு ஓய்வூதியத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது
3) வேலை வாய்ப்புத் துறை துவங்கப்பட்டது.
4) ஏழைகளுக்கு இலவச உணவு வழங்க உணவுக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன.
5) ஓய்வு விடுதிகள் கட்டப்பட்டன.
6) தலைநகரில் பாராட்டத்தக்க இலவச மருத்துவமனை கட்டப்பட்டது.

கல்வி வளர்ச்சிக்குத் தாராளமாக நிதி ஒதுக்கப்பட்டது. வானவியல், தத்துவம் போன்ற சமஸ்கிருத நூல்கள் பாரசீக மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன.

## சமயக் கொள்கை

இவர் இந்துக்களையும் ஷியா முஸ்லீம்களையும் சமய விரோதிகளாக கருதினார். இந்துக்களின் மீது ஜெசியா என்ற தலைவரி விதிக்கப்பட்டது. பிராமணர்களும் இவ்வரியை செலுத்த வேண்டி இருந்தது.

# டெல்லி சுல்தானியர் கால நிர்வாகம்

## அரசாங்கம்

இந்திய வரலாற்றில் சமயம் சார்ந்த இஸ்லாமிய நாடு உருவாக்கப்பட்டது. சுல்தான் என்ற சொல் அதிகாரத்தை குறிப்பதாகும். இவரிடம் சட்டம் இயற்றும் அதிகாரம், நீதி வழங்கும் அதிகாரம், ராணுவத் தலைமை அதிகாரம் ஆகிய அனைத்தும் குவிந்திருந்தன.

## அமைச்சர்கள்

ஆலோசனைகள் வழங்க அமைச்சர்கள் இருந்தனர். இவர்களுள் முக்கியமானோர் அறுவர் 1) வாசிர் (பிரதம அமைச்சர்) 2) அரிஸ்-இ-மாமலிக் என்ற அர்ஸ் (இராணுவத்தின் தலைமை தளபதி) 3) திவானி இன்ஷா (செய்தித் தொடர்பு மற்றும் ஆவணக் காப்புத் துறைத் தலைவர்) 4) திவானி ரிசாலத் (சமயம், அறக்கட்டளைகள், மானியங்கள், உதவித் தொகைக்கு பொறுப்பானவர் 5) திவானி ரியாசத் (சமய விவகாரங்களின் தலைமை அதிகாரி 6) காசி (நீதித் துறைத் தலைவர்)

## நீதி நிர்வாகம்

1) சமய சம்பந்தமான வழக்குகள்
2) சிவில் வழக்குகள்

சுல்தானின் தர்பார் தான் உச்ச நீதிமன்றம். இங்கு இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஒவ்வொரு நகருக்கும் ஒரு காஜி நீதிமன்றம் இருந்தது.

சுல்தானுக்கு அடுத்தபடியாக காஜி-உல் கியுசட் என்ற தலைமை நீதிபதி பேரரசின் நீதித் துறைக்கு பொறுப்பாக இருந்தார். கிராமப் பஞ்சாயத்துக்கள் தலைவர்கள், பழக்க வழக்கங்களுக்கேற்ப வழக்குகளை விசாரித்தனர். உடல் சித்ரவதையும் மரண

தண்டனையும் முக்கிய தண்டனைகளாகும். வருவாய்த் துறை அதிகாரிகள் வருவாய் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரித்தனர்.

## ராணுவம்

குதிரைப்படையும், காலாட்படையும் துருக்கியரது ராணுவத்தின் முக்கிய பகுதிகளாகும். போர் யானைகள் இந்தியர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டன. துருக்கியர்கள் கோட்டைகளுக்கு சிறப்பிடம் அளித்தனர்.

## மாகாண அரசாங்கம்

சுல்தான்களின் ஆட்சிக் காலத்தில் மாகாணங்கள் சரியாக வரையறுக்கப்படவில்லை. ஒவ்வொரு மாகாணமும் தாசில்கள் அல்லது மாவட்டங்களாகவும் பர்கனாக்களாகவும், கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டது. கஸ்பாக்கள் என்று அழைக்கப்பட்ட பர்கானாக்கள் கிராமங்களின் தொகுப்புகள், அமில், முஷ்ரிப், காசி ஆகிய அதிகாரிகள் வரி வசூல், வரவு, செலவு கணக்கு, குற்றவியல் சிவில் குற்ற வழக்குகளை ஆகியவற்றை பார்த்துக் கொண்டனர்.

## பொருளாதார நிலை

## விவசாயம்

சுல்தான்களின் ஆட்சிக் காலத்தில் நிலம் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டன.

1) இக்தா, இக்தாதாரி முறை சுல்தானியத்தின் படைப் பணிப்பாகும்.

2) கல்சா இவை அரசு நிலங்கள்.

3) ஜமீன்தார் நிலங்கள் – கட்டுப்பாட்டுடன் கூடிய சுயாதிகாரம்.

4) இனாம் - இவை சமய அறக்கட்டளைகள். இவை மரபு வழிவந்தன.

## தொழில்

சுல்தான்களின் ஆட்சிக்காலத்தில் நகர்களும், நகரங்களும் பல்கிப் பெருகின. நகர்மயப் பொருளாதாரம் உருப்பெற்றது. விலைஉயர்ந்த கற்கள், நெய்தல், சாயம் தோய்த்தல், காலிக்கோ அச்சிடுதல் போன்ற துணி சார்ந்த தொழில்கள், செம்பு, பித்தளை, இரும்பு போன்ற உலோகம் சம்பந்தப்பட்ட தொழில்கள், தோல் தொழில்கள், கப்பல் கட்டும் தொழில் போன்ற தொழில்கள் என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்தன. குடிசைத் தொழில்கள் செல்வாக்கு பெற்றிருந்தன.

## வர்த்தகம்

### உள்நாட்டு வர்த்தகம்

உள்நாட்டு வர்த்தகம் சந்தைகள் மூலம் நடைபெற்றது. சுற்றித் திரிந்து விற்பனை செய்வோர் பலர் இருந்தனர். வங்காள வர்த்தகர்கள் தரமான பொருட்களை குறைவான விலையில் விற்றனர்.

### வெளிநாட்டு வாணிபம்

கடல் வழி வாணிபம் வடமேற்குக் கணவாய்கள் மூலம் நடைபெற்றது. வங்காளத்திலிருந்து பல பொருட்கள் உலகின் பல பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டன. காஷ்மீரத்திலிருந்து குங்குமப்பூ, சால்வைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. வெள்ளி நாணயம் வெளிநாட்டு வாணிபத்திற்கு பயன்படுத்தப்பட்டது. நிலமாகவும், கடல்வழியாகவும் அனுப்பப்பட்ட பொருட்களுக்கு காப்பீடு கொடுக்கப்பட்டது.

## சமுதாய நிலை

துருக்கியர், பாரசியர், அரேபியர்கள், அபிசீனியர்கள், எகிப்தியர் ஆகியோர் அயல் வகுப்பாராக இருந்தனர்.

### சலுகை வகுப்பார்

உமராக்களும், உலமாக்களும் முஸ்லீம் சமுதாயத்தின் சலுகை வகுப்பாராகக் கருதப்பட்டனர். நபிகள் நாயகத்தின் வழி வந்தவராகக் கருதப்பட்ட உலமாக்கள் சமுதாயத்தில் சிறப்பிடம் பெற்றிருந்தனர்.

### மத்திய தர வகுப்பார்

இவர்கள் அரசாங்கத்தின் இடைநிலை, கீழ்நிலைப் பதவிகளை வகித்தவர்கள். இவர்களது செல்வத்தைவிட செல்வாக்கு அதிகம். இவர்கள் சமுதாயத்தின் சூத்திரதாரிகள்.

### கீழ்த்தட்டு மக்கள்

கீழ்த்தட்டு மக்கள் உடல் உழைப்பாளிகள். பொருள் உற்பத்தியாளர்கள், கைக்கலைத் திறன் மிக்கவர்கள். பல்வேறு உடல் உழைப்பு சார்ந்த வேலைகளைச் செய்தனர். இவர்கள் பிற வகுப்பாரின் முன்னேற்றத்துக்குப் படிக்கட்டுகளாகப் பயன்பட்டனர்.

### அடிமைகள்

அடிமைகள் வியாபாரப் பொருட்களாகக் கருதப் பட்டனர். சில சமயங்களில் திறமையும் சாதுர்யமுமிக்க அடிமைகள் அரசாங்கப் பதவிகள் பெற்று வாழ்க்கையில் உயர்ந்தனர்.

### பெண்கள் நிலை

அரச குடும்பத்துப் பெண்கள், உயர் வகுப்பினர் பெண்களும் கல்வி கற்று சில சலுகைகளுடன், செல்வாக்கு பெற்றிருந்தனர். பிற முஸ்லீம் பெண்கள் எல்லாம்

ஆண்களுக்கு கட்டுப்பட்டு அவர்கள் விருப்பமாட்டமல் வாழ்ந்-தனர். ஆண் ஆதிக்கச் சமுதாயத்தில் பெண்கள் போகப் பொருட்களாக இருந்து சிறுமைப்பட்டனர். ஆண் ஆதிக்கச் சமுதாயத்தில் பெண்கள் போகப் பொருட்களாக இருந்து சிறுமைப்பட்டனர்.

கலாச்சாரக் கலப்பு

முஸ்லீம்களும், இந்துக்களும் சமய சமுதாயப் பழக்கவழக்கங்களைப் பகிர்ந்து கொண்டனர். முஸ்லீம்-கள் இந்துகளின் திருமண முறைகளையும், சடங்குகளையும் பின்பற்றினர்.

சமயம்

இந்திய சமயமும் இஸ்லாமிய சமயமும் இருவேறு துருவங்கள். இந்துகளின் மீது ஜெசியா என்ற தலைவரி விதிக்கப்பட்டது. இந்துக்களின் தனிமைப்படுத்தப்பட்டு வேறு படுத்தப்பட்டனர். இந்துக்கள் சமயத்தின் பெயரில் கொடுமைபடுத்தப்பட்டனர்.

நிலைகள்

கல்வி

உயர் கல்விக்காக மதராசாக்கள் திறக்கப்பட்டன. சிறு நகரங்களிலும் கல்விக் கூடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இக் கல்வி கூடங்களில் சமயக் கல்வியும், அரேபிய, பார்சிய மொழிகளும் கற்பிக்கப் பட்டன

இலக்கியம்.

பார்சிய இலக்கியம் செழிப்புற்றது. அரசாங்க ஆதரவுடன் பார்சிய கவிதை, உரைநடை, இலக்கியம் பெருமளவு வளர்ந்தன. மின்காஜ் உல் சிராஜின் 'தபாகத் இ நாசிரி', ஜியாவுதீன் பரானியின் தாரீக்-இ-பெரோஸ் ஷாகி, பட்டே இ ஜகாங்கரி,

அமீர் குஸ்ரோவின் தாரிக்-இ அலாய் அலாவுதீனை குறிப்பிடத்தக்கவை. இந்நூல்கள் வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்கு தகவல் சுரங்கங்கள்.

## கலையும் கட்டடக்கலையும்

லோடி மசூதிகள், மோத் கி மஸ்ஜித், ஜமாலி மஸ்ஜித் புரானா கிலா போன்றவை. இவற்றுள் அஜ்மீர் பள்ளிவாசல், குதுப்மினார், சிருகை வகுப்பார் உருப் கல்லறைகள் குறிப்பிடத்தக்கவை. இக்கட்டடங்கள் கில்ஜிக்கள், துக்ளக்குகள், சையதுகள், லோடிகள் காலத்து கட்டடக் கலைப்பாணிகளைப் பிரதிபலிக்கின்றன. இவை இந்திய-இஸ்லாமிய கலைகளின் கலப்பாகும்.

## காசியியல்

இந்திய அரசர்கள் காசுகள் அல்லது நாணயங்கள் வெளியிடுவது புதிதல்ல. நாணயங்களில் உருவங்கள் பொறிப்பது தடை செய்யப்பட்டது. அதற்குப் பதிலாக அவற்றில் சுல்தானின் பெயர், பட்டங்கள், ஹிஜ்ரி, சகாப்தப்படி தேதி நாணயச் சாலையின் பெயர், கலைமா போன்ற விவரங்கள் பதிக்கப்பட்டன.

## சமஸ்கிருத இலக்கியம்

டெல்லி சுல்தான்கள் சமஸ்கிருத இலக்கியத்தையும் மறந்துவிடவில்லை. இவர்களது ஆட்சிக்காலத்தில் வானவியல், தத்துவம், நாடகம், மருத்துவம், ஜோதிடம் பற்றிய பல நூல்கள் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டன.

## அறிவியல் சாதனையாளர்

### பாஸ்கரா

12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மயத்தகு கணித - வானவியல் வல்லுநர் பாஸ்கரா. இவர் ஆரிய பட்டா, பிரம்மகுப்தா ஆகியோரின் கண்டுபிடிப்புகளை முன் கொண்டு சென்றார். பாஸ்கராவின் நூல்களிலும் நியூட்டனை நினைவுபடுத்துவதாக உள்ளது.

# முகலாயப் பேரரசு

16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்திய அரசியல் கொந்தளிப்புக்குள்ளாயிற்று.

## வட இந்தியாவின் நிலை

லோடி வம்சத்தின் கடைசி அரசரான இப்ராஹிம் லோடி பிரபுக்களின் ஒத்துழைப்பும், மக்கள் ஆதரவும் இன்மையால் பாபரிடம் தோற்றார். குஜராத்தை ஆட்சி செய்த சுபார்கான் வம்சத்தவர் போர்ச்சுக்கீசியரிடம் மேற்கு கடற்கரையை இழந்தனர்.

பாபரின் படையெடுப்பின் போது ஷா பேக்கின் மகன் ஷா உசைன் சிந்துவை ஆட்சி செய்தார். பஞ்சாப் டெல்லியின் ஆட்சிப் பகுதியாக இருந்தது. இதன் ஆட்சியாளர் தௌலத்கான் இப்ராஹிம் லோடியிடமிருந்து விடுபடுவதற்காகப் பாபரை இந்தியாவின் மீது படையெடுத்து வருமாறு வேண்டினார்.

## தென் இந்தியாவின் நிலை

தென்னிந்தியாவில் தக்காணத்தை பாமினி சுல்தான்கள் கி.பி 1526 வரை ஆட்சி செய்தனர். அதன் பின் அது ஐந்து சிறு சுல்தானியங்களாகப் பிரிந்தது. பாமினி சுல்தானியம் தோன்றிய காலகட்டத்தில் விஜயநகரப் பேரரசும் தோன்றியது. இரண்டு அரசுகளும் தென்னிந்தியாவைக் கைப்பற்றப் போட்டி போட்டுத் தங்களை தாங்களே அழித்துக் கொண்டன. பாபர் படையெடுப்பு பிளவுபட்டிருந்த இந்தியாவை முகலாயரின் கீழ் கொண்டு வர வழி வகுத்தது.

## பாபர் கி.பி 1483 - 1530

ஜஹாருதீன் முகமது என்ற பாபர் மத்திய ஆசியாவில் 1483 ம் ஆண்டு பிறந்தார். அரச குடும்பத்தில் பிறந்த பாபரின் குருதியில் துருக்கிய வீரமும் மங்கோலியரின் மூர்க்கத்தனமும் கலந்திருந்தது.

## பானிபட்டுப் போர் கி.பி 1526

பாபர் படையும் இப்ராகிம் லோடியின் படையும் 1526 ஏப்ரல் 21ம் தேதி பானிப்பட்டில் நேரடியாக மோதின. பாபர் படையுடன் ஒப்பிடுகையில் இப்ராகிம் லோடியின் படை பெரியது. எனினும் அப்படை சூழ்ந்து கொள்ளப்பட்டு பாபரின் காலாட் படையாலும், குதிரைப் படையாலும், துப்பாக்கி படையாலும் தாக்கப்பட்டது. இப்ராகிம் லோடி இறுதி வரைப் போரிட்டு வீர மரணமடைந்தார்.

## இந்துஸ்தான் பேரரசர்

பானிப்பட்டுப் போரில் வெற்றி வாகை சூடிய பாபர் டெல்லியைக் கைப்பற்றினார். பாபர் தனது 12வது வயதில் பர்கானாவின் அரசராகி 43வது வயதில் இந்துஸ்தானத்தின் பேரரசரானார்.

## கன்வாப் போர் கி.பி 1527

கன்வாப் போர் பாபருக்கும் மேவார் மன்னன் ராணா சங்ராம்சிங் என்ற ராணா சங்காவுக்குமிடையே நிகழ்ந்தது. ராணா சங்காவின் கூட்டுப் பெரும் படை தோற்கடிக்கப்பட்டது. வெற்றி வாகை சூடிய பாபர் காஜி அல்லது நம்பிக்கை நட்சத்திரம் என்ற பட்டப் பெயர் பெற்றார்.

## சந்தேரி கைப்பற்றப்பட்டது கி.பி 1528

சந்தேரி மன்னன் மேதினிராய் பாபருக்கு அடிபணிய மறுத்தார். சந்தேரிக் கோட்டை பாபரால்

கைப்பற்றப்பட்டது.

## காக்ரா வெற்றி கி.பி 1529

காக்ரா சண்டையில் ஆப்கானிய எதிர்ப்பை முற்றிலுமாக முறியடித்தார் பாபர். இது பாபர் தொடர்ந்து பெற்ற மூன்றாவது வெற்றியாகும்.

## பாபரின் சுயசரிதை

இவரது சுயசரிதை ஒப்பற்ற சமகால வரலாற்று ஆவணமாகும். துருக்கிய மொழியில் எழுதப்பட்ட இந்நூல் பின்னர் பர்சிய, ஆங்கில, பிரெஞ்சு மொழிகளில் பெயர்க்கப்பட்டது.

## ஷேர்கானின் எழுச்சி கி.பி 1541- 1555

### ஷேர்ஷா

முகலாயர் அரசுப் பணியில் சேர்ந்த ஷேர்கான் விரைவிலேயே பாபரின் நன்மதிப்பைப் பெற்றார். அடுத்த 9 ஆண்டுகளில் (கி.பி 1530- 1539) ஷேர்கான் பீகார், வங்காளம், ஜான்பூர் பகுதிகளுக்கு மன்னரானார். ஷேர்கான் ஷேர்ஷா என்ற பட்டப் பெயரை சூட்டிக் கொண்டார்.

### கன்னோஜ் போர் கி.பி 1540

இவரை எதிர்கொண்ட ஹுமாயூன் கன்னோஜியில் தோற்கடிக்கப்பட்டார். பேரிழப்பை சந்தித்த ஹுமாயூன் நாட்டைவிட்டு வெளியேறி நாடோடி வாழ்க்கை வாழ்ந்தார். அடுத்த 14 ஆண்டுகள் ஷேர்ஷா முகலாய மன்னரின் எதிர்ப்பின்றி ஆட்சி செய்தார்.

### வங்காளத்தில் ஷேர்ஷா

அனைவரை அடக்கி நிர்வாக சீர்திருத்தத்தை மேற்கொண்டார். இதைத் தொடர்ந்து அவர் மால்வாவையும்

## ஷெர்ஷாவின் ஆட்சி

## ஐந்தாண்டு நிர்வாகம்

இக்குறுகிய காலத்தில் அவர் நிகழ்த்திய போர்கள் பல. இவற்றுக்கிடையே ஷெர்ஷா நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செய்தார்.

### நிர்வாகத்தின் நோக்கம்

1) மக்களின் உயிரையும், உடைமைகளையும் பாதுகாத்தல்
2) நிர்வாக நீதி அனைத்துப் பிரிவு மக்களுக்கும் பொதுவாக இருத்தல்.
3) நிர்வாகத்தை நடைமுறைப் படுத்தும் போது அதிகாரிகள் மக்களைத் துன்புறுத்தாமல் கொடுமைப் படுத்தாமல் இருத்தல்.

### தனிமனித வல்லாட்சி

முகலாயர் ஆட்சியில் செல்வாக்குமிக்க பிரபுக்கள் அரசனை அடக்கிப் படைத்த நிலையையும் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே தனிமனித நிர்வாகத்தை நிலைப்படுத்தினார். அரசரே தலைமை நிர்வாகியாக இருந்தார்.

### அலுவலர்கள்

1) திவானி வசாரத் - இவர் வருவாய், நீதித்துறைகளுக்கு பொறுப்பானவர்.
2) திவானி ஆரிஸ் - இவர் இராணுவ அமைச்சர்
3) திவானி ரசாலத் - இவர் வெளியுறவுத்துறை அமைச்சர்
4) திவானி இன்ஷா - இவர் அரசாங்க ஆவணக் காப்பாளர்

### மாகாண நிர்வாகம்

ஷெர்ஷா காலப் பேரரசு பல மாகாணங்களாகவும், ஒவ்வொரு மாகாணமும் பல சர்க்கார்களாகவும், ஒவ்வொரு சர்க்காரும் பல பர்கானாக்

சர்க்காராகவும், பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பர்கானாவும் பல கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டன.

<u>மாவட்ட நிர்வாகம்</u>

சர்க்கார் அல்லது மாவட்டம் தான் பெரிய நிர்வாகப் பகுதியாகக் கருதப்பட்டது. மாவட்ட நிர்வாகத்தை பௌஜ்தார், அமீர், கருவூலக்காரர், முன்சிப், பாரசீக எழுத்தர், இந்தி எழுத்தர், பட்வாரி, தெனாத்திரி, முக்காடம் ஆகிய அதிகாரிகள் கவனித்துக் கொண்டனர்.

<u>கிராம நிர்வாகம்</u>

தூரமும் தொலைத்தொடர்பு வசதியின்மையும் கிராமங்களை அரசாங்கத்தின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குக் குறுக்கே நின்றன. எனவே கிராம நிர்வாக முறை மரபு வழி சுதந்திரமாகவே நடைபெற்றது

<u>நிலவருவாய் நிர்வாகம்</u>

இவரது நிலவருவாய் நிர்வாகத்தின் மூல நோக்கங்கள் மூன்று 1) விவசாயியை மையமாகக் கொண்டது விவசாயி வளம் பெற வேண்டும்; விளைச்சல் விவசாயியைப் பொறுத்துள்ளது

2) விளைச்சலை அதிகரிப்பது. விளைச்சல் அதிகரித்தால்தான் அரசாங்கத்தின் வருவாய் அதிகரிக்கும்

3) நிலத் தீர்வையை விவசாயிகளுக்குச் சாதகமாக நியாயமாக முடிவு செய்து அதை மனிதாபிமானத்துடன் வசூலித்தல்.

<u>மாற்றங்கள்</u> நிலம் மூன்றாக பிரிக்கப்பட்டது 1) நல்லது 2) சுமாரானது 3) கெட்டது.

இவற்றின் சராசரியைக் கணக்கிட்டு நிலத்தீர்வை இறுதி செய்யப்பட்டது. இதில் மூன்றில்

ஒரு பகுதி நில வரியாக வசூலிக்கப்பட்டது. இவ்வரியை பொருட்களாகவோ அல்லது பணமாகவோ செலுத்தலாம்.

## சிறப்பு

இந்த வருவாய் நிர்வாக முறையின் சிறப்பு சென்னையில் பட்டா தயாரித்ததாகும். வருவாய் அதிகாரி இப்பட்டாவைத் தயாரித்தார். இது விவசாயிகளின் உரிமைப் பத்திரம் ஆகும். இதனுடைய நன்மை இரண்டு

1) விவசாயி செலுத்த வேண்டிய வரி முன்னதாகவே தெரியும்

2) வருவாய் துறை அதிகாரிகள் தங்கள் விருப்பம் போல் இவ்வரியை வசூலிக்க முடியாது. இந்த முறை பின்னர் மன்றோ அறிமுகப்படுத்திய ரயத்துவாரி முறையின் முன்னோடியாகும்.

## நீதி நிர்வாகம்

ஹைதர் நீதி அரசர். நீதி வழங்குவதில் நியாயமானவர். இவரது நீதிக் கொள்கை எளிமையானது தெளிவானது. நீதி அனைவருக்கும் கிடைக்க வேண்டும்.

## பொது நீதி

பேரரசர் ஹைதர் உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்து மேல்முறையீட்டு வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கினார். நாடு முழுவதும் நீதியை நிலைநாட்ட காஜிக்கள் நியமிக்கப்பட்டனர்.

## காவல் துறை நிர்வாகம்

ஜைக்தார் பர்கானாவுக்கும், ஜைக்தார் இ ஜைக்தரன் சர்க்காருக்கும் பொறுப்பாக்கப்பட்டனர். குற்றங்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொறுப்பாக்கப்பட்டால் தான குற்றங்கள் நிகழாது என்பது ஹைதராலின் கணிப்பு.

எடுத்துக்காட்டாக ஒரு கொலையாளியைக் கண்டு-பிடிக்காத சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. தீங்கு விரோத சக்திகள் தலைதூக்கவில்லை. திருட்டு, கொலை, கொள்ளை அரிதாகி விட்டன.

வர்த்தக நிர்வாகம்

இரு வரிகள் தவிர மற்ற வரிகள் விலக்கிக் கொள்ளப்பட்டன. இறக்குமதி செய்யப்படும் போதும், சரக்குகள் விற்பனை செய்யப்படும் போது மட்டும் வரிகள் விதிக்கப்பட்டன. பல நெடுஞ்சாலைகள் இரு-மருங்கும் நிழல்தரு மரங்களோடு அமைக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான தங்கும் விடுதிகள் கட்டப்பட்டன. வர்த்தகர்கள் மற்றும் பயணிகளின் பாதுகாப்பு பற்றிப் பேரரசர் ஒற்றர்கள் மூலம் அறிந்துகொண்-டனர்.

இராணுவ நிர்வாகம்

இவர் நிலமானிய முறை ராணுவத்துக்கு பதில் நிலைப்படையை உருவாக்கினார். முந்தையவரை போன்று அவர்களே ராணுவ அதிகாரிகளையும், படை வீரர்களையும் நேரடியாகத் தேர்வு செய்து அவர்களுடைய ஊதியத்தையும் நிர்ணயித்தார். குதிரைகளுக்குச் சூடுபோடும் முறையை மீண்டும் கொண்டு வந்தார். ராணுவம் பல பிரிவுகளாக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் ஒரு தளபதியின் கீழ் இயக்கப்பட்டது. கடுமையான மேற்பார்வையின் மூலம் படைவீரர்களிடையே ஒழுங்கும் ஒழுக்கமும் கட்டுப்பாடும் உறுதி செய்யப்பட்டது. ராணு-வத்திற்கு தேவைப்படும் உணவு, உடை, உறையுள், போக்குவரத்து, பிற வசதிகளை பஞ்சாராக்கள் கவனித்துக் கொண்டனர்.